CC.NO.139/2024
DATED:- 08.01.2025
PW1:- ஜெயப்பிரகாஷ்,த/பெ. கந்தசாமி, வயது 59

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.

மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:-

6. நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். சாட்சியத்தின் பொழுது ஆவணங்களை குறியீடு செய்யவில்லை. 16.09.1958 தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் Probate செய்யப்பட்ட உயிரின் உத்தரவு வழக்கின் நகல் அ.சா.ஆ. 1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. (எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் நகல் என்பதற்காக ஆட்சேபனை தெரிவித்தார். ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 14.05.2002 அன்று ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் மடாலயம் கூட்டத்தின் பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். (14.05.2002 தேதியிட்ட மேற்படி மடாலயத்தின் கூட்டத்தின் பதிவுகள் அதனுடைய நகல்கள் அ.சா.ஆ. 2 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). (எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் நகல் என்பதற்காக ஆட்சேபனை தெரிவித்தார். ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மேலும் எதிரி போலியாக மடாலயத்தை ஏமாற்றும்

நோக்கில் பதிவு செய்த அறநிலைய பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். (14.10.2016 அன்று கூடுதல் துணைப்பதிவாளர், வடசென்னை மாவட்ட முன் பதிவு செய்யப்பட்ட ஆவண எண். 1180/ 2016 தேதியிட்ட ஆவணத்தின் சான்று நகல் அ.சா.ஆ.3 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது).

7. மேலும் எதிரியால் மடாலயத்தின் சொத்தை சென்னை ஆழ்வார்பேட்டையில் இயங்கி வரும் கார் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட வாடகை ஒப்பந்தம் ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேன். (2017 ஆம் வருடம் மே மாதம் எழுதிக் கொள்ளப்பட்ட வாடகை பத்திரத்தின் நகல் அ.சா.ஆ.4 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது) (எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் நகல் என்பதற்காக ஆட்சேபனை தெரிவித்தார். ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

8. மேலும் இந்த நீதிமன்றத்தில் ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் மடாலயத்தின் திருவொற்றியூர் இந்தியன் வங்கியில் உள்ள வங்கி கணக்கில் பாஸ்புக் நகல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேன் மற்றும் எதிரி தனபால் அதே இந்தியன் வங்கியில் தொடங்கப்பட்ட ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் மடாலயம் பெருமாள் சுவாமி

SW Trust அதனுடைய வங்கிக் கணக்கில் பாஸ்புக் ஆகியவற்றையும் சமர்ப்பித்து உள்ளேன். (இரண்டு வங்கி கணக்கின் பாஸ்புக் நகல்கள் அ.சா.ஆ.5 & அ.சா.ஆ.6 ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது). (எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் நகல் என்பதற்காக ஆட்சேபனை தெரிவித்தார். ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).